RPAD

நகர் ஊரமைப்பு மண்டல துணை இயக்குநர் சிவகங்கை அவர்களின் நடவடிக்கைகள்.

முன்னிலை: திருமதி.க.பாண்டீஸ்வரி, AMIE., MBA.,

ந.க.எண்:4210/2019/சிம-3 நாள்:28.01.2020.

பொருள்: நகர் ஊரமைப்பு - கட்டிடம் - சிவகங்கை மண்டலம் - புதுக்கோட்டை மாவட்டம் - குளத்தூர் வட்டம் - குன்றாண்டார்கோவில் ஊராட்சி ஒன்றியம் - குளத்தூர் கிராமம் - சர்வே எண்.231/6-இல் 10250ச.மீ பரப்பளவு இடத்தில் தரைதளம் + 3 தளங்களில் 368 குடியிருப்பு கட்டிடங்கள் கட்டுமானத்திற்கு கட்டிட அனுமதி வழங்க - தொழில்நுட்ப இசைவு அளித்தல் - தொடர்பாக.

பார்வை:
1) செயற்பொறியாளர், தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம், அவர்களின் கடிதம் எண்:1352/AE(P)/2019 நாள்:03.12.2019.
2) புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறைகள் கடிதம் ந.க.இ5/9586/2019 நாள்:15.06.2019.
3) இவ்வலுவலக கடிதம் இதே எண் நாள்:03.01.2020
4) நகர் ஊரமைப்பு ஆணையர் அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்:26294/2010/எல்ஏ2 நாள்:20.12.2010.
5) நகர் ஊரமைப்பு ஆணையர் சென்னை அவர்கள் கடிதம் ந.க.எண்:23152/2011/ நாள்:11.11.2011.
6) அரசாணை நிலை எண்:86 வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை நாள்:28.03.2012.
7) நன்னிலை வரி கட்டணம், மனுதாரர் செலுத்தி இவ்வலுவலகத்தில் சமர்பித்த நாள்:24.01.2020.

******

**உத்தரவு:-**

புதுக்கோட்டை மாவட்டம், குளத்தூர் வட்டம், குன்றாண்டார்கோவில் ஊராட்சி ஒன்றியம், குளத்தூர் கிராமம், சர்வே எண்.231/6-இல் 10250ச.மீ பரப்பளவு இடத்தில் தரைதளம் + 3 தளங்களில் 368 குடியிருப்பு கட்டுமானங்கள் கொண்ட வரைடத்திற்கு ஒப்புதல் இசைவு அளிக்கப்படுகிறது.

| தளவிபரம் | உத்தேச தொகுப்பு Blocks(A1toA5) | உத்தேச தொகுப்பு - Blocks(B1toB2) |
|---|---|---|
| தரைதளம் | 2206.30ச.மீ | 1208.16ச.மீ |
| முதல் தளம் | 2206.30ச.மீ | 1208.16ச.மீ |
| இரண்டாம் தளம் | 2206.30ச.மீ | 1208.16ச.மீ |
| மூன்றாம் தளம் | 2206.30ச.மீ | 1208.16ச.மீ |

பரப்பளவு கொண்ட குடியிருப்பு உபயோக கட்டுமானத்திற்கு பார்வை 4-ல் கண்ட அதிகார பகிர்மானத்திற்கு உட்பட்டு கீழ்க்கண்ட நிபந்தனைகளுடன் மனை ஒப்புதல் மற்றும் கட்டிட அனுமதி வழங்க இசைவு அளிக்கப்படுகிறது. ஒப்புதல் அளிக்கப்பட்ட கட்டிட வரைபடத்திற்கு **க.வ./ந.ஊ.து.இ.(சிம)எண்:02/2020** என எண்ணிட்டு அனுப்பப்படுகிறது.

EXECUTIVE ENGINEER
SLUM CLEARANCE BOARD
TRICHY DIVISION.

சிறப்பு நிபந்தனைகள்:

1. It is responsibility of the builders to ensure safe bearing capacity of the soil and adequacy of the foundation.

2. Planning permission is issued in accordance with the provisions of the Town and Country Planning Act and the rules made there under and does not cover the structural stability aspects including the safety during the construction which are covered under the Building Rules under the Local bodies Act. Planning permissions is issued subject to the condition that the applicant/developer and also the architects/Licensed Surveyors' and the structural Engineer associated with the development shall ensure that developments shall be structurally sound and adequate safety measures are taken during the process of construction.

3. "நகர் ஊரமைப்புத்துறை சட்டப்பூர்வமாக தொழில்நுட்ப அனுமதி/திட்ட அனுமதி அளிப்பதன்மூலம் விண்ணப்பத்தாரரின் பேரில் உள்ள நில உரிமையை உறுதிப்படுத்தவில்லை. தொழில் நுட்ப அனுமதி/திட்ட அனுமதி அளிப்பதற்கு முன்பு விண்ணப்பதாரரின் விண்ணப்பத்துடன் சமர்ப்பித்த ஆவணங்களில் (கிரையப்பத்திரம், குத்தகை பத்திரம், பட்டா, தானப்பத்திரம் பொது அதிகார பத்திரம் மேலும் பல) விண்ணப்பத்தாரர் வளர்ச்சி செய்ய உரிமையுள்ளதா என்று மட்டுமே சரிபார்க்கப்படுகிறது. அதன்மூலம் முதற்கட்டமாக விண்ணப்பத்தாரருக்கு வளர்ச்சி செய்ய உரிமை உள்ளதா என்று பார்க்கப்படுகிறது.

சொத்தினை வாங்க விரும்பும் எந்த நபரும், விண்ணப்பதாரருக்கு சொத்தின்மீது உள்ள உரிமையை தனியாக உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். மேலும் அதன் மேல் வேறு யாரேனும் தனி நபர் உரிமை கோரினால் அவர்கள் அதனை பொருத்தமான தகுதியுள்ள நீதிமன்றத்தின் முன் தீர்த்துக் கொள்ளலாம். இதனை முடிவு செய்ய நகர் ஊரமைப்புத் துறை பொருத்தமான அமைப்பு அல்ல"

4. கட்டுமானங்கள் நடைபெறும் இடத்தில், பொது மக்கள் அனைவருக்கும் தெரியும் வகையில் பலகையில் வளர்ச்சிக் கட்டுப்பாட்டு விதிகளின்படி, தளப்பரப்பு விகிதம் (FSI) திறவிடங்கள் (Setback), வாகன நிறுத்துமிடம் மற்றும் பல நிறுவப்பட்டிருக்க வேண்டும்.

5. கட்டிடம் கட்டும்போது அரசு அனுமதி பெற்ற வயரிங் காண்ட்ராக்டர் மூலமாக வயரிங் பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

6. OSR (Park) என ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள இடத்தினை திறவிடமாக (பூங்காவாக) மட்டுமே பயன்படுத்த வேண்டும். அதில் எவ்வித அபிவிருத்தியும் மேற்கொள்ளக்கூடாது.

**நிபந்தனைகள்:**

1) உத்தேச கூடுதல் குடியிருப்பு உபயோக கட்டுமானத்திற்கு Solar System அமைக்கப்பட வேண்டும்.
2) வரைபடத்தில் உத்தேசிக்கப்பட்டவாறு வாகனம் நிறுத்துமிடம் அந்த பயனுக்காகவே பயன்படுத்தப்பட வேண்டும்.
3) மனையில் காட்டப்பட்டுள்ள திறவிடங்கள் அதன்படியே நிலை நிறுத்தப்பட வேண்டும்.
4) தற்போது ஒப்புதல் பெறப்பட்ட வரைபடத்திற்கு மாறாக கட்டிடத்தில் எவ்வித மாற்றமும் செய்தல் கூடாது. மாற்றங்கள் ஏதேனும் செய்வதாக இருந்தால் இவ்வலுவலகத்தின் முன் அனுமதி பெறப்பட வேண்டும்.
5) மழைநீர் சேகரிப்பு வசதிகள் வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளவாறும், அரசாணை எண்: 138 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்: 11.10.2002ன்படியும் கட்டிடத்தில் செயல்படுத்தப்பட வேண்டும்.
6) உத்தேச கட்டிடத்தில் இருந்து வெளியேறும் கழிவுநீர் தனியார் வாகனங்கள் மூலம் வெளியேற்றவும், உபயோகிப்போருக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதிகள் மற்றும் இதர தேவைக்கான நீர் வசதிகள் ஆகியவை மனுதாரர் தனது சொந்த செலவில் செய்து தர வேண்டும்.
7) மனையில் அமையும் குடிநீர் மேல்நிலைத் தொட்டி மற்றும் கிணறு ஆகியவற்றுக்கு கொசுதடுப்பு சாதனம் பொருத்தப்பட வேண்டும்.

EXECUTIVE ENGINEER
SLUM CLEARANCE BOARD
TRICHY DIVISION.

8) உத்தேச கட்டுமானத்தில் விதிப்படித் தேவையான அளவுக்கு தீ தடுப்பு மற்றும் தீயணைப்பு சாதனங்கள் அமைக்கப்பட வேண்டும்.
9) அரசாணை எண் 341/நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.1) துறை நாள்: 3.11.04-ன் படி செப்டிக் டேங்கில் "U" Trap அமைத்தல் வேண்டும்.
10) சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அறிவிக்கையின்படி உத்தேச கட்டிடத்திற்கு FLY ASH BRICKS மற்றும் Materials பயன்படுத்தப்பட வேண்டும்.
11) அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தின் நகல் (உண்மைநகல்) கட்டுமானங்கள் நடைபெறும்போது உத்தேச நிலத்தில் பிரசுரிக்கப்பட வேண்டும்.
12) உத்தேச கட்டிடத்தின் கழிவுநீர் வெளியேற்றுதல் தொடர்பாக/ STP Design-ற்கு தமிழ்நாடு மாசுகட்டுப்பாட்டு வாரியசட்டம் 1974 பிரிவு 25 (Water Act)ன் படிமேற்படி வாரிய இணக்கம் (Consent) பெற்றுக் கொள்ளப்பட வேண்டும்.

மனுதாரர் நன்னிலைவரி கட்டணம் ரூ.1,82,800/- (ரூபாய் ஒரு லட்சத்து எண்பத்திரண்டாயிரத்து எண்ணூறு மட்டும்) கூராய்வுக் கட்டணம் ரூ.43,000/– (ரூபாய் நாற்பத்திமூன்றாயிரம் மட்டும்) மாநில பாரத வங்கியில் செலுத்தி செலுத்துச்சீட்டின் அசல் மற்றும் நகல் இவ்வலுவலகத்தில் சமர்ப்பித்துள்ளார்.

ஒப்புதலளிக்கப்பட்ட வரைபடங்கள் இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

**வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ), குன்றாண்டார்கோவில் ஊராட்சி ஒன்றியம், புதுக்கோட்டை மாவட்டம்** அவர்கள் மேற்கொண்டு உத்தரவினை விண்ணப்பதாரருக்கு வழங்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

மனுதாரர் மேற்கொண்டு **வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ), குன்றாண்டார்கோவில் ஊராட்சி** ஒன்றியம், புதுக்கோட்டை மாவட்டம் அவர்களை அணுகுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

ஒப்புதலளிக்கப்பட்ட உத்தரவு நகல் மற்றும் வரைபடங்கள் பெற்றுக் கொண்டமைக்கு ஒப்புகைச்சான்று அனுப்புமாறு **வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ), குன்றாண்டார்கோவில் ஊராட்சி ஒன்றியம், புதுக்கோட்டை மாவட்டம்** அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

28/01/2020

நகர் ஊரமைப்பு துணை இயக்குநர்
சிவகங்கை மண்டலம், சிவகங்கை.

28/01/2020

**இணைப்பு:**
உத்தரவு மற்றும் இருதொகுப்பு வரைபடங்கள்

**பெறுநர்:**
வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ),
குன்றாண்டார்கோவில் ஊராட்சி ஒன்றியம்,
புதுக்கோட்டை மாவட்டம்.

நகல்:
1. செயற்பொறியாளர்,
தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம்,
திருச்சிராப்பள்ளி கோட்டம்,
மதுரை ரோடு,
பாலக்கரை,
திருச்சிராப்பள்ளி - 8.
2. தொழில்நுட்ப வைப்பறை - ஒரு தொகுப்பு வரைபடத்துடன்.

**EXECUTIVE ENGINEER**
**SLUM CLEARANCE BOARD**
**TRICHY DIVISION.**

- 43 -

குன்றாண்டார்கோவில் ஊராட்சி ஒன்றியம் குளத்தூர் ஊராட்சி மன்றத்தலைவர் அவர்களின் செயல்முறைகள்.

முன்னிலை : திருமதி.M.ஜெயராணி,

ஆ.எண். 1 /2020 நாள்: 17.02.2020.

பொருள் : வரைபட ஒப்புதல் கிளாத்தூர் ஊராட்சி - புல எண் 231/6-ல் நகர் பிளாட் 368 வீடு கட்ட வரைபடம் ஒப்புதல் / வழங்கி உத்தரவிடல்.

பார்வை : 1. புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் ந.க.17749/97 வி1, நாள்: 30.09.2014.
2. திரு. செயற்பொறியாளர் தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம் திருச்சி கோட்டம் என்பவர் விண்ணப்பம் நாள்: 13.02.2020.
3.இதர ஆவணங்கள்.

***********

உத்தரவு:

குன்றாண்டார்கோவில் ஊராட்சி ஒன்றியத்தை சேர்ந்த குளத்தூர் ஊராட்சி கிளாத்தூர் கிராமம், புல எண். 231/6 பிளாட் எண் 1.0250 சதுர மீட்டரில் திரு. செயற்பொறியாளர் தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம் திருச்சி கோட்டம் என்பவர் புதிய வீடு கட்டிட கால நீட்டிப்பு உத்தரவு வழங்கப்படுகிறது.

நிபந்தனைகள்:

1. வரைபடத்தில் உள்ளதிட்டப்படி வீடு கட்ட வேண்டும்.
2. வரைபடத்தில் மாற்றம் ஏதும் செய்தால் குளத்தூர் ஊராட்சி மன்றத்தலைவர் முன் அனுமதி பெற வேண்டும்.
3. கட்டிடம் கட்டுவதற்கு வழங்கப்படும் அனுமதி 17.02.2020 முதல் 16.02.2023 தேதி முடிய வரையிலும் அமுலில் இருக்கும்.
4. கட்டிடம் கட்டி முடித்த பின் திருத்திய வரைபடம் இவ்வலுவலகத்திற்கு திருப்பி அனுப்பி வைக்கப்பட வேண்டும்.
5. கட்டிடத்தில் முன்பக்கம் 8 அடியும் பின்பக்கம் 10 அடியும் இருக்க வேண்டும். இரு பக்கங்களிலும் தலா 5 அடியும், இடம் விட்டு வீடு கட்டப்பட வேண்டும்.
6. ஊராட்சியின் மூலம் கழிவு நீர் வாய்க்கால் கட்டும் வரை கழிவு நீரை தோட்டப்பராமரிப்புக்கு பயன்படுத்த வேண்டும். கழிவு நீர் கட்டிடத்திற்கு வெளியே கண்டிப்பாக கொண்டு வரக்கூடாது.
7. மாவட்ட சுகாதார அலுவலர், தொழிற்சாலைகளின் துணைத்தலைவர், ஆய்வாளர் மற்றும் நகல் அமைப்பு துணை இயக்குநர் அலுவலகத்திலிருந்து ஆட்சேபனை எதுவும்வரப்பெற்றால், அதற்கு நிர்வாகமே முழு பொறுப்பு ஏற்க வேண்டும்.
8. பள்ளிக்கட்டிடம், கோவில் ஆகிய இடங்களின் அருகில் வீடுகள் அமைக்கப்பட்டால், சம்பந்தப்பட்ட நிர்வாக அனுமதி பெற்றிருக்க வேண்டும்.
9. கண்டிப்பாக வீட்டிற்கு மழைநீர் சேகரிப்பு தொட்டி அமைக்கப்பட வேண்டும்.
10. கழிவு நீர் வடிகால் வசதி வீட்டின் வெளிப்புறம் வராமல் வீட்டின் உள்பகுதியில் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்.

M. [signature] 17-2-20
தலைவர்,
குளத்தூர் ஊராட்சி,
குன்றாண்டார்கோவில் ஊராட்சி ஒன்றியம்.

இணைப்பு:

அனுமதிக்கப்பட்ட வரைபடம்,

பெறுநர்

நிர்வாக பொறியாளர்,
தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம்,
திருச்சி கோட்டம்,
திருச்சி.

[signature]
EXECUTIVE ENGINEER
SLUM CLEARANCE BOARD
TRICHY DIVISION.